# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : C.C.593/2024**

**Prosecution witness : அ.சா.3** **Date : 01.11.2025.**

| | |
|---|---|
| **Name : சிவநாதன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் திருச்சியில் குடியிருந்து பாதுகாவலராக வேலை செய்கிறேன். எதிரியை எனக்கு தெரியும். செக்யூரிட்டி பரமசிவம் என்பவர் I.E.X service man security force என்ற நிறுவனத்தில் வேலை செய்து வந்தார். கருமலைக்கூடல் HDFC வங்கியில் சரண்யா என்ற பெயரில் லோன் கட்டவில்லை என்று சொல்லி வீட்டை சீல் வைத்திருந்தார்கள். அந்த வீட்டிற்கு பரமசிவம் பாதுகாவலராக பணியமர்த்தப்பட்டிருந்தார். 01.08.2024ம் தேதி அவர் என் அலுவலகத்திற்கு போன் செய்து தன்னை எதிரி தகாத வார்த்தையால் திட்டி, அடித்துவிட்டதாக சொன்னார்.

2) நான் உடனே திருச்சியலிருந்து கிளம்பி கருமலைக்கூடலுக்கு இரவு நேரம் வந்த போது பக்கத்து வீட்டில் பரமசிவம் படுத்திருந்தார். மறுநாள் காலை பரமசிவத்தை 10.00 மணிக்கு மேட்டூர் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சேர்த்தோம். கடந்த 03.08.2024ம் தேதி பரமசிவத்தை கருமலைக்கூடல் போலீசார் விசாரித்தார்கள். நான் போலீசார் விசார்த்த போது நடந்தவற்றை சொன்னேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

3) சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் ஆமாம். HDFC வங்கியில் சீல் வைக்கப்பட்ட வீட்டின் உரிமையாளர் தெரியுமா என்றால் தெரியாது. HDFC வங்கி உத்தரவின் பேரில் தான் பரமசிவத்தை காவல் பணிக்கு அனுப்பினேன் என்றால் ஆமாம். பரமசிவத்தை 01.08.2024 ம் தேதி பணியமர்த்தப்பட்டது குறித்து ஆவணம் ஏதாவது தாக்கல் செய்யப்பட்டதா என்றால் இல்லை.

4) 01.08.2024 ம் தேதி பரமசிவம் போன் செய்து தகவல் சொன்னதன் பேரில் தான் தகவல் தெரியும் என்றால் ஆமாம். அவர் தகவல் சொன்னபின்னர் தான் பரமசிவத்தை சம்பவயிடத்தில் பார்த்ததாக நான் சொல்கிறேன் என்றால் ஆமாம். பரமசிவத்தை சம்பவயிடத்தில் நான் பார்க்கும் போது இரவு 11.30 மணியிருக்கும் என்றால் ஆமாம். காயமடைந்த பரமசிவம் வீட்டின் அருகே இருந்தாரா என்றால் ஆமாம். அதுவரை பரமசிவம் காவல் நிலையம் சென்று புகார் கொடுக்கவில்லை என்றால் ஆமாம். மேலும் அவர் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெறவில்லை என்றால் ஆமாம். அரசு மருத்துவமனையில் 02.08.2024 ம் தேதி மதியம் 03.00 மணிக்கு தான் மருத்துவமனைக்கு சேர்த்ததாக சொல்வது சரி என்றால் இல்லை. மருத்துவ ஆவணம் மதியம் 3 மணிக்கு சேர்த்ததாக உள்ளது என்றால் சிகிச்சைக்கு சேர்த்த போது காலை 10 மணி. உள்நோயாளியாக சேர்ந்தது மதியம் 3 மணி. வழக்கு எதிரிக்கும் நான் சொன்ன சம்பவத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. பரமசிவம் என்பவர் இறந்துவிட்டார் என்றால் ஆமாம். அவர் சொன்ன தகவலின் பேரில் தான் பரமசிவத்தை மருத்துவமனையில் சேர்த்தேன் என்றால் ஆமாம். வழக்கு எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. பரமசிவத்திற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C.593/2024**

**Prosecution witness : அ.சா.4** **Date : 01.11.2025.**

| | |
|---|---|
| **Name : சேகர்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் தற்போது ஆத்தூர் நகர போக்குவரத்து பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 03.08.2024ம் தேதி நிலைய அலுவலில் இருந்த போது சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் பரமசிவம் அவர்களின் உத்தரவின் பேரில் மேட்டூர் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கபெற்ற காயத்தகவலின் பேரில் நான் மருத்துவமனை சென்று பரமசிவம் (65) த/பெ குருநாதன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் நிலையம் வந்து பதிவு செய்யப்பட்ட வாக்குமூலத்தை சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். பின்னர் விசாரணைக்கு பிறகு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதாக தெரிந்துகொண்டேன். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) எத்தனை மணிக்கு மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் கடந்த 03.08.2024ம் தேதி பகல் 1 மணிக்கு கிடைத்த உத்தரவின் பேரில் 01.30 மணிக்கு மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த பரமசிவம் வயது 65, த/பெ.குருநாதன் என்பவரை 15.00

மணிக்கு விசாரித்தேன். பரமசிவத்தை யார் எனக்கு அடையாளம் காட்டியது என்றால் பணியிலிருந்த செவிலியர் எனக்கு அடையாளம் காட்டியதன் பேரில் வாக்குமூலம் பதிவு செய்தேன். பரமசிவத்தை விசாரித்த போது அவருடன் யாரும் இல்லை. உள்காயம் அவருக்கு இல்லை என்றால் இருந்தது. வெளிக்காயம் ஏதுமில்லை. அவர் வாக்குமூலமாக சொன்னதை நான் எழுதிக் கொண்டேன்.

3) பரமசிவம் தவிர வேறு யாரிடமும் தகவல் பெறவில்லை. வாக்குமூலம் பதிந்த நேரம் அன்றையதினம் பிற்பகல் 03.00 மணிக்கு பதிந்தேன். வாக்குமூலம் பதிவு செய்த பின்பு நான் மேற்குறிப்பு செய்துள்ளேன் என்றால் ஆமாம். மேற்குறிப்பு செய்த பின்னர் காவல் சிறப்பு உதவி ஆய்வாளரிடம் அன்றையதினம் மாலை 5 மணிக்கு வாக்குமூலத்தை சமர்பித்தேன். காயமடைந்த பரமசிவம் ஒரு நாள் முழுக்க சம்பவயிடத்தில் இருந்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**

# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : C.C.593/2024**

**Prosecution witness : அ.சா.5** **Date : 01.11.2025.**

| | |
|---|---|
| **Name : பரமசிவம்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது கருமலைக்கூடல் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 03.08.2024–ம் தேதி கருமலைக்கூடல் காவல்நிலையத்தில் நான் நிலையப் பொறுப்பில் இருந்த போது, மேட்டுர் அரசு மருத்துவமனையில் இருந்தது கிடைக்கப் பெற்ற காயத்தகவலின் பேரில் மேற்படி மருத்துவமனைக்கு தலைமை காவலர் சேகர் என்பவரை அனுப்பி அவர் அங்கு சென்று உள்நோயாளியாக இருந்த பரமசிவம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, என் வசம் ஒப்படைத்ததன் பேரில் அதனை பெற்ற நான் புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப **நி.கு.எண்.192/2024 u/Sec. 296(பி), 115(2), 351(2), 333, 329(4) பி.என்எஸ்எஸ்** ஆக வழக்கு பதிவு செய்தேன். புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.2** முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ 3** ஆகும்.

2) பின்னர் புகார்மனு மற்றும் அசல் முதல்தகவல் அறிக்கையை குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2 அவர்களுக்கு அனுப்பியும், மற்ற நகல்களை சம்மந்தபட்ட அலுவலர்களுக்கு அனுப்பிவைத்தேன். புலன் விசாரணைக்காக காவல் உதவி ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>.**

3. நான் சம்பவயிடம் செல்லவில்லை என்றால் ஆமாம். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் ஆமாம். வாக்குமூலம் கொடுத்த பரமசிவத்தை நான் பார்க்கவில்லை என்றால் ஆமாம். என் மேலதிகாரிகளின் உத்தரவின் பேரில் எதிரி மீது பொய்யான முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அதற்கு ஆதாரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/- தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**